**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF II ADDITIONAL DISTRICT JUDGE, THOOTHUKUDI.**

Case No. S.C. No. 91/2023
Prosecution side witness for P.W.6

| | | | |
|---|---|---|---|
| Name | ... திரு.சித்திரை | Caste | ... |
| Father's/ Husband Name | ... | Calling | ... |
| Village | ... | Religion | ... |
| Taluk | ... | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **29.04.2026**

Accused is absent, U/s. 317 of Cr.P.C. petition filed and allowed.

**முதல் விசாரணை:–**

நான் பிறந்தது முதல் தூத்துக்குடி மாவட்டம், செய்துங்கநல்லூர் நம்பிசாமி கோவில் தெருவில் குடியிருந்து வருகிறேன். கூலி வேலை செய்து வருகிறேன். இந்த வழக்கில் சம்மந்தப்பட்ட எதிரி கணேசனை தெரியும். அவர் எனக்கு தூரத்து உறவினர். எதிரிக்கும், அவரது மனைவிக்கும் சண்டை ஏற்பட்டு கணேசன் குடித்துவிட்டு வந்து ஏசுவதால் அவரது மனைவி அவரிடம் கோபித்துக்கொண்டு அவரது அம்மா வீடான தட்டார்மடம் அருகேயுள்ள புதுக்குடிக்கு சென்றுவிடுவார். 28.03.2016 ஆம் தேதி காலை 9.00 மணியளவில் கணேசன் என்னிடம் வந்து தனது மனைவியை பார்க்க போவதாக என்னிடம் வந்து பைக் கேட்டார். நான் எனது பைக்கான TN72 Q 0199 என்ற பதிவெண்கொண்ட டிவிஎஸ் விக்டர் பைக்கை அவர் உறவினர் என்பதால் அவரிடம் கொடுத்து அனுப்பினேன். மறுநாள் காலை பேப்பரை பார்த்தபிறகுதான் எதிரி கணேசன், அவரது மைத்துனரை கழுத்தை அறுத்து கொலை

செய்துவிட்டதாக கேள்விப்பட்டேன். பின்னர் 11.04.2016 ஆம் தேதி மேற்படி எதிரி கணேசனை பைக்குடன் தட்டார்மடம் காவல்நிலையத்தில் போலீசார் கைது செய்ததாக சொல்லி என்னை அழைத்ததன்பேரில் நான் அங்கு சென்று எதிரியையும், என்னுடைய பைக்கையும் அடையாளம் காட்டினேன். நீதிமன்றத்தில் காண்பிக்கப்படும் TN72 Q 0199 என்ற பதிவெண்கொண்ட டிவிஎஸ் விக்டர் பைக்தான் நான் அன்றையதினம் எதிரி கணேசனுக்கு கொடுத்து அனுப்பியது அது அ.சா.பொ.4 தான். இது சம்மந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>குறுக்குவிசாரணை (எதிரிதரப்பில்)</u>

நான் என்ன படித்துள்ளேன் என்றால் 9 ஆம் வகுப்பு படித்துள்ளேன். எழுத படிக்க தெரியுமா என்றால் தெரியும். என்னுடைய பைக்கை புதியதாக வாங்கினேனா என்றால் இல்லை, செகண்ட்கண்டில்தான் வாங்கினேன். அந்த சமயத்தில் இந்த வண்டிக்கு ஆர்சிபுக், இன்சூரன்ஸ் வைத்திருந்தேன் என்றால் ஆமாம். ஆர்சிபுக், இன்சூரன்ஸை போலீசார் விசாரணையின்போது கொடுத்தேனா என்றால் கொடுக்கவில்லை, என்னுடைய பைக்தான் என்று சொன்னேன். கணேசன் அவரது மனைவியிடம் குடித்துவிட்டு தகராறு செய்வார் என்று போலீசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சொல்லியுள்ளேன். நான் வேலைக்கு சென்றால் அந்த பைக்கில்தான் செல்வேன், வருவேன் என்றாலும், எனக்கு மிகவும் அத்தியாவசியமான பைக் என்றாலும் சரிதான். அந்த சம்பவத்திற்கு பிறகு வேறு பைக் வாங்கினேனா என்றால் வாங்கவில்லை, ரொம்ப வருடம் கழித்து வேறு பைக் வாங்கினேன். பைக்கை காவல்நிலையத்தார்கள்தான் கைப்பற்றினார்கள் என்று தெரியும் என்றால் சரிதான். எனக்கு அத்தியாவசியமான பைக்கை நீதிமன்றத்தில் மனு செய்து திரும்ப பெற்றேனா என்றால் இல்லை. அதற்கு தனிப்பட்ட

காரணங்கள் எதுவும் உண்டா என்றால் இல்லை. நான் சொன்ன நாள், நேரத்தில் எதிரி என்னிடம் பைக்கை கேட்டு பெறவில்லை என்றால் சரியல்ல. அது என்னுடைய பைக்கும் அல்ல என்றால் சரியல்ல. வழக்கிற்காக உருவாக்கப்பட்ட சான்றுபொருட்கள் என்னை சாட்சியாக தவறாக பயன்படுத்தியுள்ளார்கள் என்றால் சரியல்ல. நான் கேள்விப்பட்டமாதிரி பேப்பரில் எதிரிதான் கொலை செய்தார் என்று தெரிந்துகொள்ளவில்லை என்றால் சரியல்ல. எதிரிக்கும், எனக்கும் பேச்சுவார்த்தை கிடையாது என்றால் சரிதான். எனது சாட்சியம் முன்னுக்குபின் முரணானது என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை இல்லை.</u>

Taken down before me in open court, in the presence of the Accused read over to the witness and admitted by the deponent to be correct

II Additional District& Sessions Judge,
Thoothukudi.

**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF II ADDITIONAL DISTRICT JUDGE, THOOTHUKUDI.**

Case No. S.C. No. 91/2023
Prosecution side witness for P.W.7

| | | | |
|---|---|---|---|
| Name | ... **டாக்டர். திரு.ஆத்திகுமார்** | Caste | ... |
| Father's/ Husband Name | ... | Calling | ... |
| Village | ... | Religion | ... |
| Taluk | ... | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **29.04.2026**

Accused is absent, U/s. 317 of Cr.P.C. petition filed and allowed.

**<u>முதல் விசாரணை:–</u>**

நான் தற்பொழுது ஸ்ரீவைகுண்டம் அரசுமருத்துவமனையில் தலைமை குடிமை மருத்துவராக பணியில் இருந்து வருகிறேன். கடந்த 29.03.2016 அன்று சாத்தான்குளம் அரசுமருத்துவமனையில் மருத்துவ அலுவலராக பணியில் இருந்தபோது, அன்று பிற்பகல் 2.15 மணியளவில் தட்டார்மடம் காவல்நிலைய குற்ற எண். 52/2016 என்ற வழக்கில் திரு.அரிராமன் என்பவரது சடலத்தை சடலக்கூறாய்வு செய்யவேண்டி தட்டார்மடம் காவல்நிலைய ஆய்வாளர் அவர்களிடமிருந்து விண்ணப்பத்தினை பெற்றேன். அதற்கான விண்ணப்பம் நீதிமன்றத்தில் காண்பிக்கப்படுவது அது **அ.சா.ஆ–4** ஆகும். அன்று பிற்பகல் 2.30 மணியளவில் முதல்நிலை காவலர் எண்.186 திரு.சுபானந்தம் என்பவரால் அடையாளம் காட்டப்பட்ட ஆணின் உடல் மீது சடலக்கூறாய்வை ஆரம்பித்தேன். அந்த சடலத்தில் நான்கு அவையங்களிலும் சடலவிறைப்பு தன்மை காணப்பட்டது. சுமாரான தேக அமைப்பும், கருத்த உடலும்

உடைய சடலம் கண்கள் திறந்த நிலையில், வாய் மூடி மல்லாந்த நிலையில் காணப்பட்டது. கீழ்கண்ட வெளிப்புற காயங்கள் காணப்பட்டன.

காயம் எண்.1 – கழுத்தின் முன்புறத்தில் சுமார் 15 செ.மீ x15 செ.மீ எலும்பு வரை ஆழமான நன்கு அறுக்கப்பட்ட ஒரு வெட்டுக்காயம் காணப்பட்டது. அந்த காயமானது மூச்சுகுழாய், உணவுக்குழாய், சதைகள், நரம்புகள், மற்றும் இரத்தக்குழாய்களை துண்டாக வெட்டியவாறு காணப்பட்டது. முதுகு தண்டின் எலும்புவரை அக்காயம் காணப்பட்டது.

உடலின் மற்ற உள்ளுறுப்புகளான கல்லீரல், மண்ணீரல், சிறுநீரகங்கள் அனைத்தும் வெட்டுத்தோற்றம் வெளிறி காணப்பட்டன. இரைப்பையில் சுமார் 75 மில்லி அளவுடைய திரவம் காணப்பட்டது. மூளையின் வெட்டுத்தோற்றம் வெளிறி காணப்பட்டது. உடல் உள்ளுறுப்புகளையும், இரத்த மாதிரிகளையும் இரசாயன பகுப்பாய்விற்காக சேகரித்து வைக்கப்பட்டன. எனது முதல்நிலை கருத்துரையை நிறுத்தி வைத்து, மரணம் சம்பவித்த நேரத்தை மட்டும் குறிப்பிட்டு, பின்னர் அவைகள் இரசாயன பகுப்பாவிற்கு அனுப்பப்பட்டு அங்கிருந்து கிடைக்கப்பட்ட இரசாயன அறிக்கையான T.No.5668/2016/TW/TOX.H/649/2016 dated: 15.04.2016 ன்படி இரைப்பை, சிறுகுடல், கல்லீரல், சிறுநீரகங்கள் ஆகியவற்றில் ஈத்தேல் ஆல்கஹால் இருந்ததாகவும், வேறு எந்த நச்சுபொருட்களும் காணப்படவில்லை. எனவே இறந்துபோனவர் பிரேத பரிசோதனைக்கு முன் 18 லிருந்து 24 மணிநேரத்திற்கு முன்பாக அவருக்கு கழுத்து பகுதியில் ஏற்பட்ட அறுக்கப்பட்ட காயத்தினால் ஏற்பட்ட உதிர போக்கினாலும், அதிர்ச்சியினாலும், அவருக்கு மரணம் ஏற்பட்டிருக்கும் என இறுதிநிலை பிரேத பரிசோதனை கருத்துரை வழங்கினேன். அது சம்மந்தமாக நான் வழங்கிய பிரேத பரிசோதனை அறிக்கை நீதிமன்றத்தில்

காண்பிக்கப்படுவது அது **அ.சா.ஆ–5** ஆகும். மேற்படி காயமானது நீதிமன்றத்தில் காண்பிக்கப்படும் அ.சா.பொ. 3 ஆன சூரிகத்தியால் இறந்துபோனவரை ஒரு நபர் மாறி மாறி அறுத்தால் ஏற்பட வாய்ப்புண்டு. இது சம்மந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

குறுக்குவிசாரணை (எதிரிதரப்பில்)

பிரேத பரிசோதனைக்கான வேண்டுகோள் கடிதம் கொடுக்கும்போது வழக்கின் வரலாறும் கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். இந்த வழக்கு சம்மந்தமாக போலீசார் எந்த தேதியில் விசாரித்தார்கள் என்றால் ஞாபகமில்லை. இந்த வழக்கில் சேகரிக்கப்பட்ட இரத்தம் என்ன வகையான இரத்தம் என்று தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை. காவல் ஆய்வாளர் என்னை விசாரிக்கும்போது என்னிடம் கத்தியை காட்டி விசாரித்தாரா என்றால் பொதுவாக ஆயுதங்களை காட்டி விசாரிப்பார்கள், இந்த வழக்கில் காண்பித்தார்களா என்று நினைவில்லை.

மறுவிசாரணை இல்லை.